# இந்திய தேசத்தலைவர்கள்









உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# இந்திய தேசத்தலைவர்கள்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | வ.உ.சிதம்பரனார் | 1 |
| 2 | பாரதியார் | 3 |
| 3 | நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் | 5 |
| 4 | ஜான்சிராணி லட்சுமி பாய் | 7 |
| 5 | மகாத்மா காந்தியடிகள் | 9 |
| 6 | திருப்பூர் குமரன் | 11 |
| 7 | வண்ணமிடுதல் | 13 |

இன்று [26.1.2023] 73வது குடியரசு தினமாகும். நம் நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தலைவர்கள் பலர் ஆவர். அவர்களுள் குறிப்பிட்ட சிலரைப் பற்றி இந்த வகுப்பில் தெரிந்துகொள்ளலாம்.

## வ.உ.சிதம்பரனார்

“வ.உ.சி.” என்றழைக்கப்படும் வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் 1872ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் நாள் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் பிறந்தார். பெற்றோர் உலகநாதன் – பரமாயி அம்மாள். இவர் தந்தை சிறந்த வழக்கறிஞர். தந்தையைப் போலவே வழக்கறிஞரான இவர் ஏழை எளிய மக்களுக்காகவே வாதாடினார். ஆங்கிலேயரின் அடக்குமுறையை எதிர்த்து விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பாரதியாரின் நெருங்கிய நண்பர். நம் நாட்டுச் செல்வத்தை வெள்ளையர்கள் கொள்ளையடிப்பதைக் கண்டு கொந்தளித்து எழுந்தார். ஆங்கிலேயருக்கு எதிராக 1906 ஆம் ஆண்டு அக்டோபர் பதினாறாம்{16] நாள் “சுதேசி நாவாய்ச்[கப்பல்] சங்கத்தை ஏற்படுத்தினார். சிறு வணிகர்களின் உதவியுடன் எஸ்.எஸ்.காலியோ என்னும் கப்பலை வாங்கினார். தூத்துக்குடி–இலங்கை இடையே கப்பலைச் செலுத்தினார். ஆங்கிலேயரை எதிர்த்துக் கப்பலோட்டியதால் “கப்பலோட்டிய தமிழன்” என்று அழைக்கப்பட்டார். ஆங்கிலேயரின் சதியால் சிறையில் அடைக்கப்பட்டு அங்கு செக்கிழுத்தார்; பல்வேறு இன்னல்களை அனுபவித்தார்.

செக்கிழுத்தசெம்மல், தென்னாட்டுத்திலகர் என்றெல்லாம் மக்களால் அழைக்கப்பட்டார். சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டவர் ஏழையாகவே வாழ்ந்தார். 1936 நவம்பர்18 அன்று தன் இன்னுயிர் துறந்தார். அவரது தியாகத்தைப் போற்றும் விதமாக அரசு பல்வேறு இடங்களில் அவரது சிலையை நிறுவியுள்ளது; தூத்துக்குடி துறைமுகத்திற்கு இவர் பெயரைச் சூட்டியுள்ளது. சிதம்பரனாரின் உறுதியையும் போராட்ட உணர்வையும் உணர்ந்து செயல்படுவோம்.

வந்தே மாதரம்!!"



# பாரதியார்

பாரதியாரின் இயற்பெயர் சுப்பையா என்கிற சுப்பிரமணியம். இவர் திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் டிசம்பர் மாதம் 11–ம் தேதி 1882–ம் ஆண்டு சின்னச்சாமி மற்றும் இலட்சுமி அம்மாளுக்குப் பிறந்தவர் ஆவார். பாரதிக்குப் பதினோரு வயது இருக்கும்போது இவரது கவிபாடும் ஆற்றலையும் புலமையையும் பாராட்டி 'பாரதி' என்ற பட்டத்தை எட்டயபுர மன்னர் வழங்கினார். அன்றிலிருந்து சுப்ரமணிய பாரதியார் என்று அழைக்கப்பட்டார்.

தமிழ், ஆங்கிலம் மட்டுமல்லாமல் மொத்தம் பதினான்கு மொழிகளைக் கற்றுள்ளார். கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற பல கவிதைகளை இயற்றியுள்ளார். இந்தியா ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டு இருந்தபொழுது இந்திய சுதந்திர முழக்கத்தைப் பாடல்கள் மற்றும் கவிதைகள் மூலம் வெளிப்படுத்தினார். மகாகவி, அமரகவி, தேசியக்கவி, சீட்டுக்கவி, மக்கள்கவி, முண்டாசுக் கவிஞர், விடுதலைக்கவி, தமிழ் புதுக்கவிதையின் தந்தை, பாட்டுக்கொரு புலவன் பாரதி, தற்கால தமிழ் இலக்கியத்தின் விடிவெள்ளி, புதுக்கவிதையின் முன்னோடி என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகிறார். ஆங்கிலக்கவிஞர் ஷெல்லிதாசன் மீது கொண்ட பற்றின் காரணமாக தன்பெயரை "ஷெல்லிதாசன்" என்று வைத்துக்கொண்டார்.

தன்னுடைய தீராத சுதந்திர தாகத்தைத் தணிக்க 1905 – ம் ஆண்டு முதல் முழுமையாக விடுதலைப் போராட்டத்தில் ஆர்வம் காட்டினார்.

அச்சமில்லை அச்சமில்லை

அச்சமென்ப தில்லையே

இச்சகத்து ளோரெலாம்

எதிர்த்துநின்ற போதினும்,

அச்சமில்லை அச்சமில்லை

அச்சமென்ப தில்லையே.

என்று பாடி மக்களிடையே விடுதலை உணர்வைத் தூண்டினார்.

"அக்கினி குஞ்சொன்று கண்டேன் – அதை

அங்கொரு காட்டிலொர் பொந்திடை வைத்தேன்!..."

என்னும் பாரதியின் பாடல் வரிகள் சிறுவர்களின் மனதில் இனம் புரியாத ஒரு தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

1907ம் ஆண்டில் "இந்தியா" என்னும் வார ஏட்டையும் "பால பாரதம்" என்ற ஆங்கில இதழையும் பொறுப்பேற்று நடத்தினார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் பாரதியார் தீவிரமாக ஈடுபடத் துவங்கினார். தாம் ஆசிரியராக இருந்த இந்தியா என்னும் பத்திரிகையை, விடுதலை வேட்கையை மக்களுக்கு ஊட்டுவதற்கான களமாகப் பயன்படுத்தினார்.

சுதந்திரப் போராட்டத்தில், தனது பாடல்கள் வாயிலாக தமிழர்களை வீறுகொள்ளச்செய்த பாரதியார் 11.09.1882 அன்று இவ்வுலகை விட்டு மறைந்தார்.



# நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்

“வங்கத்துச்சிங்கம்” என்று அழைக்கப்படும் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் 1897 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் தேதி ஒரிசா மாநிலத்தில் கட்டாக் என்னும் ஊரில் பிறந்தார்.

பெற்றோர் ஜானகி நாத் போஸ் – பிரபாவதிதேவி. இவரது குடும்பத்தில் உள்ளவர்கள் 27 தலைமுறைகளாக வங்க மன்னர்களின் படைத்தலைவர்களாக இருந்தனர். நாட்டின் சூழ்நிலை பற்றி அடிக்கடி வீட்டில் விவாதங்களில் ஈடுபட்டதைப் பார்த்த அவரது தந்தை நேதாஜியை அரசியலில் ஈடுபடுத்த விரும்பாமல் ஐ.சி.எஸ் தேர்விற்குப் படிப்பதற்கு இலண்டன் அனுப்பினார். மேலும் ஐ.சி.எஸ் தேர்வில் வெற்றி பெற்றபோதும் ஆங்கிலேயருக்கு அடிமையாக வேலை செய்யக்கூடாது என்ற உறுதியுடன் பணியை ராஜினாமா செய்தார்.

பின்பு இந்திய விடுதலைப்போராட்டத்தில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். இன்னும் வலுவான போராட்டம் வேண்டும் என்பதற்காக “இரத்தத்தைத் தாருங்கள் உங்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தருகிறேன்” என்று கூறினார்.

இந்தியாவில் உள்ள இளைஞர்கள் மட்டுமல்லாமல் ஜெர்மன் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளின் உதவியையும் நாடினார். பெரும் இராணுவப்படையை உருவாக்கினார். பெண்களும் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும் என பெண்களுக்கென “ஜான்சிராணிப் படையை” உருவாக்கினார். “நேதாஜி” என்ற பெயர் அவர் உருவாக்கிய பெயர் அல்ல. படை வீரர்களால் அன்புடன்

வழங்கப்பட்டது ஆகும். “நேதாஜி” என்றால் சிறந்த தலைவர் என்று பொருள்.

நேதாஜியின் வீரமிக்க அணுகுமுறை விடுதலைப் போராட்டத்தில் மகத்தானது. தேசத்தின் வீரத்திருமகனாக சுபாஷ் சந்திரபோஸ் போற்றப்படுகிறார்.

இவரது இறப்பு குறித்து தெளிவான தகவல் இல்லை. இவருக்கு 1992 ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய விருதான ‘பாரத ரத்னா’ விருது வழங்கப்பட்டது.

நேதாஜி இல்லாவிட்டாலும் அவர் பெயர் ஒலிக்காத மேடைகளே இல்லை. அவர் கூறிய வார்த்தைகள் இந்தியாவில் எங்கும் எதிரொலித்துக்கொண்டே இருக்கின்றன.

“வாளேந்தி நிற்கக்கூடிய எதிரிகளுடன்
வாளேந்தி தான் போரிட வேண்டும்.”

ஜெய்ஹிந்த்!!!



# ஜான்சிராணி லட்சுமி பாய்

ஜான்சிராணி லட்சுமி பாய் 1828 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் நாள் உத்திரப்பிரதேச மாநிலத்தில் காசி என்னும் ஊரில் பிறந்தார். பெற்றோர் மௌரியபந்தர் – பகீரதிபாய். ஜான்சிராணி லட்சுமி பாயின் இயற்பெயர் மணிகர்ணிகா.

சிறுவயதிலேயே மணிகர்ணிகாவிற்குப் போர் புரியும் ஆசை இருந்ததால் வாள் பயிற்சி, குதிரை ஏற்றம், துப்பாக்கிச்சுடுதல் போன்ற பயிற்சிகளை முறைப்படி கற்றுக்கொண்டார்.

1842 ஆம் ஆண்டு ஜான்சி நாட்டை ஆண்டு கொண்டிருந்த ராஜா கங்காதரராவ் என்ற மன்னரைத் திருமணம் செய்து கொண்டார். ஜான்சி நாட்டின் ராணியாக அரியணையில் அமர்ந்ததால் மணிகர்ணிகா என்ற பெயர் மறைந்து "ஜான்சிராணி லட்சுமிபாய்" என்ற பெயர் வந்தது. 1851ஆம் ஆண்டு ஜான்சிராணிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. தாமோதரராவ் எனப் பெயர் சூட்டப்பட்ட அந்தக் குழந்தை பிறந்த நான்கு மாதங்களிலே இறந்து விட்டது. அதனால், ஜான்சிராணி வளர்ப்பு மகனைத்தத்தெடுத்து, அந்தக் குழந்தைக்கும் தாமோதரராவ் எனப் பெயர் சூட்டி வளர்த்தார். மகனின் இறப்பை மறக்க முடியாமல் 1853 ஆம் ஆண்டு உடல் நலம் சரியில்லாமல் ஜான்சிராணியின் கணவர் இறந்துவிட்டார்.

மன்னர் இறந்ததால் ஆங்கிலேயர்கள் வாரிசு இல்லாத இந்திய மன்னர்களின் நாட்டைக் கைப்பற்றும் நோக்கத்தோடு ஜான்சி நாட்டைக் கைப்பற்றி, ராணிக்கு அறுபதாயிரம் ஓய்வு ஊதியத்தைக் கொடுத்துக்

கோட்டையை விட்டு வெளியேற்றினர். கோட்டையை விட்டு வெளியேறி ராணிமஹாலில் தங்கியிருந்த ஜான்சிராணி, “ போராடி இறப்பது அடங்கிக் கிடப்பதை விட மேல்” என்று எண்ணி ஆங்கிலேயருக்கு எதிராக படைபலத்தினைத் திரட்டினர். அதன் பிறகு ஜான்சிராணி, அவரது மகனைத் தோளில் சுமந்து கொண்டு படை வீரர்களுடன் இணைந்து குவாலியர் நாட்டை நோக்கிப் படையெடுத்துச் சென்றார். குவாலியர் நாட்டு மன்னன் ஜான்சிராணியின் வாள் திறமையைக்கண்டு திகைத்து நின்றார். மேலும் ஜான்சிராணி வாள் திறமையால் குவாலிய நாட்டை வெற்றி கொண்டார்.

அதன் பிறகு ஆங்கிலேயர்கள் குவாலிய நாட்டைக் கைப்பற்ற மிகப்பெரிய படையுடன் சென்றனர். அந்தச் சமயத்தில் ஜான்சிராணி ஆண் வேடம் தரித்து ஆங்கிலேயர்களுடன் போரிட்டு 1858 ஆம் ஆண்டு வீரமரணம் அடைந்தார்.

ஜான்சிராணியின் நினைவாக பள்ளிப்பாடப் புத்தகத்தில் ஜான்சிராணியின் வரலாறு குறித்த பாடங்கள் இடம்பெற்றுள்ளன.



# மகாத்மா காந்தியடிகள்

மகாத்மா காந்தியடிகள் குஜராத் மாநிலத்தில் உள்ள போர்பந்தர் என்னும் ஊரில் 1869 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் நாள் பிறந்தார். இவரது பெற்றோர் கரம்சந்த் காந்தி, புத்திலிபாய். மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்பது இவரது முழுப்பெயர் ஆகும். இவர் பள்ளிப்படிப்பை முடித்து அதன்பின் இலண்டன் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்று, மும்பையில் இரண்டு ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றினார். பின்பு தென்னாப்பிரிக்காவில் வழக்கறிஞராகப் பணியாற்றியபோது, அங்கு தலைவிரித்தாடிய நிறவெறிக்கு எதிராக தென்னாப்பிரிக்க வாழ் இந்தியர்களின் பிரச்சனைகளுக்குக் குரல் கொடுத்தார்.

1915ம் ஆண்டு தென்னாப்பிரிக்காவிலிருந்து மீண்டும் இந்தியா திரும்பினார் காந்தி. அப்போது ஆங்கிலேயர்கள் இந்தியாவில் உப்பிற்கு வரி விதித்தனர். அதைக் கண்டித்து 1930 ஆம் ஆண்டு "உப்புச் சத்தியாக்கிரகத்தை (தண்டியாத்திரை)" நடத்தினார். ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்பதை வலியுறுத்தி 1942 ஆம் ஆண்டு "வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை" நடத்தினார். அயல்நாட்டுப் பொருட்களைத் தடைசெய்யவும், நெசவுத்தொழிலை மேம்படுத்தவும், எளிய கதர் ஆடைகளையே அணிந்தார் காந்தியடிகள். ராட்டைச் சுற்றி, கைகளால் நெய்யப்படும் தறியைப் பெரியளவில் நாடு முழுவதும் செய்யத் தொடங்கவேண்டும் என்பதையே வலியுறுத்தினார்.

காந்தியடிகள் பயன்படுத்திய மிகப்பெரிய ஆயுதம்"அகிம்சை". "ஆங்கிலேயர்களிடம் இருக்கும் துப்பாக்கியைக் கண்டு அஞ்சாதே,

அறத்தின் வழி நின்று எதிர்த்து நில், ஆங்கிலப் படை வீரர்கள் தாக்கினால் தாங்கிக் கொள், எதிர்த்துத் தாக்காதே, கைது செய்தால் மனமகிழ்வோடு செல், மரண தண்டனை விதித்தால் முகமலர்ச்சியோடு தூக்குக் கயிற்றின் முன் நில்" என்றார் காந்தியடிகள். காந்தியடிகளின் உறுதியைப் பார்த்த ஆங்கிலேய அரசு இந்தியாவிற்கு விடுதலை தர முன் வந்தது. இரவீந்திரநாத் தாகூர் அவர்களால் “மகாத்மா” என்றும், நேதாஜி அவர்களால் “தேசத்தந்தை” என்றும் புகழப்பட்டவர் காந்தியடிகள்.



# திருப்பூர் குமரன்


இந்தியாவின் தேசத்தந்தை காந்தியடிகள் சொல் கேட்டு தங்களின் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இழக்க சித்தமாய் இருந்தவர்கள் பலர். திருப்பூர் குமரனும் ஒருவராவார். இந்திய விடுதலைப்போராட்ட தியாகியான திருப்பூர் குமரன் ஈரோடு மாவட்டம் சென்னிமலையின் அருகிலுள்ள மேலப்பாளையம் எனும் ஊரில் 1904ஆம் ஆண்டு அக்டோபர் 4ஆம் தேதி நாச்சிமுத்து, கருப்பாயி தம்பதியினருக்கு நான்காவது மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் குமாரசாமியாகும். குடும்ப வறுமை காரணமாகப் பள்ளிப்படிப்பைத் தொடர முடியாமல் ஆரம்பக் கல்வியுடனேயே முடித்துக்கொண்டார். கைத்தறி நெசவுத்தொழிலைச் செய்து வந்தார். நெசவுத்தொழிலில் போதிய வருமானம் இல்லாத காரணத்தினால் அங்கிருந்து திருப்பூருக்குச் சென்றார்.


திருப்பூர் தேசபந்து இளைஞர் மன்றத்தில் உறுப்பினராகவும் செயற்பட்டு வந்தார். இளம்வயது முதலே நாட்டுப்பற்றுக் கொண்ட இவர் காந்தியடிகளின் கொள்கையில் அதிக ஈடுபாடு கொண்டவராவார். காந்தியடிகள் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்ட குமரன் பல போராட்டங்களுக்குத் தலைமை தாங்கிச் செயற்பட்டார். தேசபக்திப் பாடல்களைப் பாடியபடி, அது தொடர்பான ஓரங்க நாடகங்களையும் நடத்தி வந்தார். இதனால் பிரிட்டீஷ் அரசாங்கப் போலீசாரால் கண்காணிக்கப்பட்டு வந்தார். 1932 ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் தேதி நடைபெற்ற ஆங்கிலேய அரசுக்கு எதிரான

அறவழிப்போராட்டத்தில் திருப்பூர் குமரன் கலந்து கொண்டார். அப்போது ஆங்கிலேய அரசின் காவல்துறையால் தடியடிக்கு உள்ளானார்.





# வ.உ.சி. கப்பல்






# பாரதி முண்டாசு







# பாரதி மீசை







# நேதாஜி ராணுவ உடை










# ஜான்சி ராணி வாள் & கேடயம்







# ஜான்சி ராணி குதிரை







# காந்தி கண்ணாடி





# காந்தி கைஇராட்டை






# காந்தி கைத்தடி








# இந்திய தேசியக்கொடி







# இந்திய தேசியக்கொடி










உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.WorldTamilAcademy.com
அறிவே வளம்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.worldtamilacademy.com